Durham District School Board (துர்ஹாம் மாவட்ட பள்ளி நிர்வாகம்), நமது மாணவர்கள் மற்றும் பள்ளி சிறப்பாகச் செயல்படுவதற்கு, பல ஆண்டு மேம்பாட்டுத் திட்டத்தை வழிவகுக்க கருத்துக்களைக் கோருகிறது. இந்தச் செயல்பாடுகளின் ஒரு பகுதியாக இந்த கருத்துக்கணிப்பில் பங்கேற்க உங்களை அழைக்கிறது.

மதிப்புகள், முன்னுரிமைகள் மற்றும் வெற்றிக்கான வழிகள் ஆகியவற்றைத் தெரிந்துகொள்ள DDSB பள்ளிக்கு புதிய மேப்பாட்டுத் திட்டத்தை உருவாக்க உங்கள் கருத்துகள் பயன்படுத்தப்படும்.

இதில் பங்கேற்பது தன்னார்வமானது மற்றும் பெயர் அடையாளம் வெளிப்படுத்தப்படாது. உங்கள் பதில்களில், பெயர்கள் அல்லது உங்களை அடையாளப்படுத்தக்கூடிய வேறு தகவல்களை வழங்க வேண்டாம். இந்தக் கருத்துக்கணிப்பு கல்விச் சட்டம், பிரிவு 169.1 -இன் அடிப்படையில் பல ஆண்டு திட்டத்தை உருவாக்கும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. (https://www.ontario.ca/laws/statute/90e02).

இந்த கருத்துக்கணிப்பு, உருது, பார்சி, டாரி, அரபு, சீன (எளிமைப்படுத்தப்பட்டது), தமிழ் மற்றும் பிரஞ்சு ஆகிய மொழிகளிலும் கிடைக்கிறது. இந்த கேள்விகளை DDSB இணையத்தளத்திலும் பார்க்கலாம்.

(https://www.ddsb.ca/en/about-ddsb/strategic-plan.aspx)

இந்த கருத்துக்கணிப்பைப் பற்றி ஏதாவது சந்தேகம் இருந்தால், எங்களைத் தொடர்புகொள்ளவும்.

உங்கள் யோசனைகள் மற்றும் கருத்துக்களை பகிர்ந்துகொண்டமைக்கு நன்றி.

## மாணவர்களுக்கான கேள்விகள்

1. உங்கள் பள்ளியில் கிடைக்கக்கூடியவற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது எது?
2. DDSB -இல் படிக்கும் மாணவர் என்ற முறையில், உங்களுக்கு எது பிடித்திருக்கிறது?
3. ஒரு மாணவர் என்ற முறையில், பள்ளியில் என்ன மாற்றம் செய்தால் நன்றாக இருக்கும்?
4. DDSB பள்ளியில் புதிதாக இணையும் ஒரு மாணவருக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

## விரிவுரையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கான கேள்விகள்

1. உங்கள் பணியில் உங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது எது?
2. DDSB -இன் ஊழியர் என்ற முறையில், உங்களுக்கு எது பிடித்திருக்கிறது?
3. ஒரு ஊழியர் என்ற முறையில், பள்ளியில் என்ன மாற்றம் செய்தால் நன்றாக இருக்கும்?
4. DDSB பள்ளியில் புதிதாக இணையும் ஒரு ஊழியருக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

## பெற்றோர்கள்/ பராமரிப்பாளர்கள் மற்றும் குடும்பத்தினர்களுக்கான கேள்விகள்

1. உங்கள் குழந்தையின் (களின்) பள்ளி அனுபவத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்து எது?
2. DDSB பள்ளியில் படிக்கும் ஒரு மாணவரின் பெற்றோர் / பராமரிப்பாளர் அல்லது குடும்ப உறுப்பினர் என்ற முறையில், பள்ளியில் எது சிறப்பாக இருக்கிறது?
3. ஒரு பெற்றோர் / பராமரிப்பாளர் அல்லது குடும்ப உறுப்பினர் என்ற முறையில், பள்ளியில் என்ன மாற்றம் செய்தால், உங்கள் அனுபவத்தைச் சிறப்பிக்கும்?
4. DDSB பள்ளியில் புதிதாக இணையும் பெற்றோர் / பராமரிப்பாளர் அல்லது குடும்ப உறுப்பினர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

## சமூகத்தினர் / நிறுவனங்களுக்கான கேள்விகள்

1. மாணவர்கள், ஊழியர்கள், பெற்றோர்கள் / பராமரிப்பாளர்கள் போன்றவர்களுக்கு ஒரு பள்ளியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது எது?
2. இப்போது மாணவர்கள், ஊழியர்கள், பெற்றோர்கள் / பராமரிப்பாளர்கள் போன்றவர்களுக்குப் பள்ளியில் எது சிறப்பாக இருக்கிறது?
3. இப்போது மாணவர்கள், ஊழியர்கள், பெற்றோர்கள் / பராமரிப்பாளர்கள் போன்றவர்களுக்குப் பள்ளியில் என்ன மாற்றம் செய்தால் நன்றாக இருக்கும்?
4. DDSB பள்ளியில் புதிதாக இணையும் ஒரு மாணவர், ஊழியர் அல்லது பெற்றோர் / பராமரிப்பாளர் போன்றவர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?